சென்னை–5, வேளாண்மை இயக்குநர் அலுவலக துணை இயக்குநர் (நிர்வாகம்–2) அவர்களின் செயல்முறை ஆணைகள்

பிறப்பிப்பவர்– திருமதி.இரா.பேபி,

நாள்.13.09.2017

செ.மு.ஆ.எண்.அபபி3/122896/2016

பொருள் பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப் பணி – 2013–2014 மற்றும் 2014–2015–ம் ஆண்டிற்கான தட்டச்சர் தெரிவு செய்தல் – வேளாண்மைத் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது – பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் – சார்பாக.

பார்வை 1. தேர்வாணைய கடித எண். 861/பி.எஸ்.டி–எப்/2016, நாள். 02.09.2016
2. இவ்வலுவலக செயல்முறை ஆணை எண். அநிபி3/147565/2015, நாள்.30.09.2016 மற்றும் 27.04.2017

-----------

**ஆணைகள்.**

பார்வை 1–ல் காணும் தேர்வாணைய கடிதம் வாயிலாக 2013–2014 முதல் 2014–2015 வரை தொகுதி 4–ல் அடங்கிய தட்டச்சர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு வேளாண்மை துறைக்கு தெரிவாளர்கள் ஒதுக்கப்பட்டதை தொடர்ந்து பார்வை 2–ல் காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணை வாயிலாக பணி நியமன ஆணை வழங்கப்பட்டு, திருமதி.சி.இராஜேஸ்வரி, அவர்கள் தட்டச்சராக இவ்வலுவலகத்தில் 21.04.2017 பி.ப பணியில் சேர்ந்து கொண்டார்.

பார்வை 1–ல் காணும் தேர்வாணைய கடிதத்தில் தெரிவித்துள்ளபடி திருமதி.சி.இராஜேஸ்வரி, அவர்கள் இவ்வலுவலகத்தில் தட்டச்சராக பணியில் சேர்ந்த நாளான 21.04.2017 பி.ப முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

திருமதி.சி.இராஜேஸ்வரி, தட்டச்சர் அவர்கள் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளில் இருந்து மூன்று வருட தொடர் பணியில் இரண்டாண்டு காலம் தகுதிகாண் பருவத்தில் வைத்து ஆணையிடப்படுகிறது. தகுதிகாண் பருவத்தினை நிறைவு செய்த பின்னரே இரண்டாம் மற்றும் தொடர் ஊதிய உயர்வுகளும் வழங்கிட அரசு விதிகளின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

தபியோ

மேலும், தகுதிகாண் பருவத்தில் முடிக்க வேண்டிய அரசு வரையறுக்கப்பட்டுள்ள கணினி தேர்வினை அல்லது அதற்கு இணையான தொழில்நுட்பக் கல்வி தகுதிகளை அடைந்த பின்னரே தகுதிகாண் பருவம் முடித்து ஆணையிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இவ்வாணை, உயர்நீதிமன்ற சென்னை/மதுரை கிளையில் நிலுவையில் உள்ள 2013–2014 முதல் 2014 – 2015 வரையிலான தொகுதி 4 –ல் அடங்கிய தெரிவாளர்கள் தெரிவு தொடர்பான ரிட் மனு மீது வழங்கப்படும் இறுதி தீர்ப்புக்கு உட்பட்டதாகும் என்ற விபரம் தெரிவிக்கப்படுகின்றது.

14.9.17

துணை இயக்குநர் (நிர்வாகம்–2)

**பெறுநர்**
திருமதி.சி.இராஜேஸ்வரி,
தட்டச்சர், இவ்வலுவலகம்.

14/9/17

**நகல்.** ‘அநிபி’ பிரிவு இவ்வலுவலகம்
**நகல்.** ‘பணம்’ பிரிவு பணிப்பதிவேட்டில் பதிவு செய்திடும் பொருட்டு
**நகல்.** ‘பட்டியல்’ பிரிவு இவ்வலுவலகம்
**நகல்.** அபபி 1 மற்றும் 6 இருக்கை
**நகல்.** இருப்புக் கோப்பு